# இவர்களிடமிருந்து...

## யோவாஸ் - யோய்தா

யோவாஸ் யோய்தா என்பவர்களைக் குறித்து 2நாளா கமம் 24-ம் அதிகாரத்தில் பார்க்கலாம். இவர்கள் செய்த காரியங்கள் என்ன? இவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் எவை என் பதைக் குறித்து தான் இங்கே நாம் பார்க்கப் போகி றோம்.

**யோவாஸ்: யூதாவின் ராஜா (2நாளா 24:25)**

பிறக்கும் போது யூத குலத்தில் ராஜவம்சத்தில் பிறந் தான். ஆனால் இறக்கும் போது தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள். ஆனால் ராஜாக்களின் கல் லறைகளில் அவனை வைக்கவில்லை.

**யோய்தா: ஆசாரியன் (2நாளா 24:15,16)**

பிறக்கும் போது லேவி கோத்திரத்தில் ஆரோன் வழி வந்த ஆசாரியன். ஆனால் இறக்கும் போது தீர்க்காயு சுள்ளவனாய் முதிர் வயதில் மரித்தான். அவனைத் தாவீதின் நகரத்தில் ராஜாக்களண்டையிலே அடக்கம் பண்ணினார்கள்.

### சம்பவத்தின் பின்னணி

யூதாவின் ராஜாவாகிய யோராமுக்கு பின் அவருடைய மகன் அகசியா ராஜாவாகி ஒரு வருஷம் எருசலேமில் அரசாண்டான். அவன் சமாரியாவில் யெகூ என்பவ னால் கொன்று போடப்பட்டான். பின்பு யூதாவை அர சாளுகிறதற்கு அகசியாவின் குடும்பத்திற்கு பெலன் கொள்ளத்தக்கதாக ஒருவரும் இல்லாமல் போயிற்று. ஆதலால் அகசியாவின் தாயாகிய அத்தாலியாள் எழும்பி யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவ ரையும் சங்காரம் பண்ணினாள்.

### அத்தாலியாள்-பிசாசு பயன்படுத்திய பாத்திரம்

இயேசு கிறிஸ்து யூதா குலத்தில் ராஜாவாக தாவீதின் சந்நிதியில் பிறப்பார் என்ற தீர்க்கதரிசனத்தின் மூலம் அறிந்த பிசாசு, அத்தாலியாளைப் பயன்படுத்தி யூத ருக்கு ராஜாவாக இயேசுகிறிஸ்து வெளிப்படக் கூடாத படிக்கு ராஜவம்சமான எல்லா யூத குடும்பத்தையும் அழித்து கொண்டிருக்கும்போது அகசியா ராஜாவின் சகோதரியாகிய யோசபாத்தும், அவளுடைய கணவ னாகிய *யோய்தாவும்* சேர்ந்து அகசியாவின் ஆண் பிள்ளையாகிய *யோவாசைக்* களவாயெடுத்து அவனை யும் அவன் தாதியையும் ஒளித்து வைத்த படியினால் ஆசாரியனாகிய யோய்தா வின் குடும்பத்தில் பிசாசின் திட்டம் நிறைவேறாமல் போனது.

### யோய்தா– கர்த்தர் பயன்படுத்திய பாத்திரம்:

அத்தாலியாள் தேசத்தின் மேல் ராஜ்யபாரம் செய்த போது, யோய்தாவின் குடும்பம் தன் உயிரையும் துச் சமாய் நினைத்து, ஆறு வருஷமாய் தங்களோடு கூட யோவாஸை ஒளித்து வைத்து வளர்த்தனர். யோய்தா ஏழாம் வருஷத்தில் திடன் கொண்டு, ஆசாரியரையும், லேவியரையும், இஸ்ரவேலருடைய பிதாக்களின் வம சத் தலைவர்களையும், சபையாரையும் கூட்டி, இதோ, கர்த்தர் தாவீதின் குமாரரைக் குறித்து சொன்ன படியே ராஜாவின் குமாரன் ராஜாவாக வேண்டும் 2நாள 23:36 என்று கூறி திட்டங்களை வகுத்து, 7வயதான யோவா ஸை ராஜாவாக்கி, அத்தாலியாளைக் கொன்று போட் டனர்.

பின்னர் ஆலயத்தின் காரியங்களை ஒழுங்குபடுத்தி, கர்த்தருக்கு பிரியமாக இருக்க வேண்டும் என்று ராஜா வையும், ஜனங்களையும் உடன்படிக்கை பண்ணிக் கொள்ளும்படி செய்தான். ஆசாரியனாகிய யோய்தா வின் நாட்களிலெல்லாம் யோவாஸ் கர்த்ரின் பார்வைக் குச் செம்மையானதைச் செய்தான். முதிர்வயதில் மர ணமடைந்த யோய்தாவை, அவன் தேவனுக்காகவும், அவருடைய ஆலயத்திற்காகவும், இஸ்ரவேலுக்கு நன்மை செய்த படியினால் அவனைத் தாவீதின் நகரத் தில் ராஜாக்களண்டையில் அடக்கம் பண்ணினார்கள். (2நாளா 24:16)

### இவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம்

ஆசாரியனாகிய யோய்தாவின் வேலை தன்னைத் தேடி வரும் மக்களின் பாவங்களுக்காகப் பலியிடுவது தான். இதைச் செய்தாலே போதும் இதற்குரிய கூலி இவனைத் தேடி வரும். ஆனால் தான் உண்டு தன் வேலை உண்டு என்றெண்ணி விடாத படி “தேவனே! உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று சொல்லி தேவனுடைய திட்டம் அதாவது கர்த்தருடைய வார்த் தையை (தாவீதின் சந்ததி தான் ராஜாவாக வேண் டும்) நிறைவேற்றுவதற்கு, தன் உயிரையும் பொருட் படுத்தாத படி ஆறு வருஷகாலமாய், பல சிரமங்களை மேற்கொண்டு, ஆலயத்தில் ஒளித்து வளர்த்தான். இதில் இந்த ஆசாரியனுக்கு எந்த ஒரு லாபமுமில்-லை. ஆயினும் கர்த்தருடைய வார்த்தையை நிறை வேற்ற உறுதி கொண்டவனாய் இருந்தான்.

ஒரு துன்மார்க்கனும் அழிந்து போவது தேவனுடைய சித்தம் அல்ல. எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும். இது தான் தேவனுடைய விருப்பமும் அவரின் வார்த் தையும். அதனை நிறைவேற்றிட இன்று எத்தனை பேர் உண்மையான ஆத்ம பாரத்தோடு ஜெபிக்கிறோம்? உழைக்கிறோம்? அதற்குத் தானே இன்று தம்மு டைய இரத்தத்தை சிந்தி நம்மை ஆசாரியராயும், ராஜாக்களாயும் மாற்றியிருக்கிறார்.

நாம் உண்டு நம் வேலை உண்டு என்றிருக்கிறோமா? நமக்கு உலக ஆதாயம் இல்லாவிடினும், கர்த்தருக் காய் வைராக்கியமாய் நிற்கின்றோமா? சிந்திப்போம். நான் தான் பெரிய ஆசாரியன், நீ சிறியவன், நான் தான் பெரிய ஊழியக்காரன், நீ சிறியவன் என்பதல்ல.

கர்த்தருடைய திட்டத்தையும், விருப்பத்தையும், நிறைவேற்றிட வைராக்கியமாய் இருப்பவனே, முடிவில் உயர்ந்த கனத்தைப் பெறுவான். ஆசாரியனாயிருந்தும், ராஜாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்பட்டது போல…

## ராஜாவாகிய யோவாஸ்

ஆசாரியனாகிய யோய்தா மரணமடைந்த பின்பு ராஜா யூதாவின் பிரபுக்களுக்கு செவி கொடுத்து, கர்த்தரின் ஆலயத்தை விட்டு, தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும் சேவித்தார். அப்பொழுது கர்த்தருக்கு கோபம் மூண்டது. ஆகவே அவர் தம்மிடத்தில் திரும்பப் பண்ண தீர்க்கதரிசிகளை அனுப்பினார். இவர்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைக்கு செவி சாய்க்கவே இல்லை. தேவனுடைய ஆவி ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரனாகிய செசரியாவின் மேல் இறங்கினதினால், அவன் ஜனத்திற்கு எதிரே நின்று தீர்க்கதரிசனம் உரைத்தான். ராஜாவோ அவனை ஜனங்களை விட்டு கல்லெறிந்து கொன்றார். 2நாளா 24:22

அப்படியே அவனுடைய தகப்பனாகிய யோய்தா அவனுக்குச் செய்த தயையை ராஜாவாகிய யோவாஸ் நினையாமல் அவனுடைய குமாரனைக் கொன்று போட்டான். இவன் சாகும் போது **கர்த்தர் அதைப் பார்ப்பார். அதைக் கேட்பார் என்றான்.**

மறுவருஷத்திலே சிறு கூட்டமாய் வந்த சீரியாவின் சேனை, மகா பெரிய சேனையாயிருந்த யோவாஸின் ஜனங்களை அவர்கள் கையில் கர்த்தர் ஒப்புக்கொடுத்தார். *அவர்கள் அவனை மகா வேதனைக்குள்ளவனாக விட்டுப் போனார்கள்.* ஆசாரியனுடைய குமாரனின் இரத்தப்பழியினிமித்தம், அவனுடைய ஊழியக்காரர், அவனைக் கொன்று போட்டார்கள். அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள். ஆனாலும் ராஜாக்களின் கல்லறைகளில் அவனை வைக்கவில்லை.

## இவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம்

தன் உயிரையே காப்பாற்றி, தன்னை வளர்த்து ஆளா-க்கியது மாத்திரமல்ல அவனை ராஜாவாக்கிய தயையை, நன்மையை மறந்தவன். அதோடு தனக்கெதிராக தீர்க்கதரிசனம் உரைத்த அவ்வாசாரியனின் மகனை கொலை செய்யச் சொன்ன நன்றி கெட்ட துரோகி. ஆகவே தேவன் ஒரு சிறிய கூட்டத்தை பயன்படுத்தி மகா பெரிய சேனையை வீழ்த்தச் செய்தார். மற்ற ராஜாக்களும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ததுண்டு. அவர்களைக் கர்த்தர் எதிரியின் கைகளில் விட்டு விடுவார். ஆனால் இவனுக்கோ, எதிரியின் மூலமாக மகா வேதனையை அடையும்படிச் செய்தார். இவனுக்கு இன்னும் வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது அல்லவா?. அருமையானவர்களே நமக்கும் இப்படிப்பட்ட அனுபவங்கள் வந்துவிடக் கூடாதல்லவா. நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமா? நாம் பிறர் செய்த நன்மைகளை, தயையை மறந்ததுண்டா?....

## இந்த கேள்விகளுக்கு நீங்கள் எப்படி.......

**1.** தன் உயிரையே தந்து, உதிரத்தை சிந்தி நம்மையும், நம் ஆத்துமாவையும் காப்பாற்றியிருக்கின்றாரே, எத்தனையோ தோல்விகளில், தாழ்வுகளில், கஷ்டங்களில், இழப்புகளில் எல்லாவற்றிலுமிருந்து மீட்டு, நமக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்திருக்கிறாரே, அவரை மறந்தவர்களாய், நன்றி கெட்டவர்களாய் கர்த்தருக்கு முன்பாக காணப்படுகின்றோமா? அவரை விட்டு தூரமாய் போய் விட்டோமா? இல்லையேல் அவர் நம்மை ஆசீர்வதித்த நோக்கத் --தை நிறைவேற்றுகின்றோமா?

**2.** நம்மை வளர்த்து ஆளாக்கி, பல வித தியாகங்களின் மத்தியில் நம்மை உயர்ந்த நிலை அடையப் பிரயாசப்பட்ட பெற்றோர்கள் செய்த நன்மைகளை மறந்து விட்டவர்களாய் காணப்படுகின்றோமா? நல்ல நிலை வந்தவுடன் அவர்களிடம் கணக்கு பார்த்துக் கொண்டிருக்கின்றோமா? நம்மை வளர்த்த கணக்கைப் பார்த்தால் எண்ணி முடியாதல்லவா? பெற்றோ-ரை மறந்தவர்களாய் நாம் காணப்பட்டோமானால் அதுவும் துரோகமே. துரோகம் செய்யாதிருந்தால் முதியோர் இல்லங்கள் ஏது? அநேக கிறிஸ்தவ பெற்றோர்கள் முதியோர் இல்லங்களில் காணப்படுவது கொடுமையல்லவா?

**3.** நமக்கு இக்கட்டான நிலை வரும் போது நம் உற்றாரோ, நண்பரோ செய்த தயையை மறந்து விட்டோமா? நம்மை படிக்க வைத்த, நல்ல வேலையை தந்த, வெளிநாட்டு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த, வீடு வாங்க, கட்ட உதவி செய்த, மருத்துவச் செலவை சந்திக்க உதவி செய்த, விசாவுக்கு உதவிய, உயிர் போகும் தருவாயில் நம்மை காப்பாற்றிய இப்படி எத்தனையோ விதங்களில் பிறர் மூலம் நாம் பெற்ற நன்மையை மறந்திருக்கின்றோமா? பிறருக்கு விரோதமாய் துரோகம் செய்யாதிருப்போம். ராஜ நிலையிலிருந்தாலும், நன்றி மறந்தவர்களாயிருந்தால் முடிவு கீழான நிலை தான். நாம் அவர்களைக் காட்டிலும் நல்ல நிலை அடைந்தவுடன் அவர்களை மறந்தாலோ, நன்மை செய்யாமல் போனாலோ, அவர்களைத் தாழ்வாய் நினைத்தாலோ, தீமை செய்தாலோ

“கர்த்தர் அதைப் பார்ப்பார்

கர்த்தர் அதைக் கேட்பார்”

ஆமென்.